பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை 14.07.2024 கதிர் 249

# தேர்தலை நிறுத்தக் கோரும் மனு மீது நாளை விசாரணை

## 3 நீதிபதிகள் அமர்வு முன் இடம்பெறும்

எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தலை நடத்துவதன் மூலம் அரசமைப்பு மீறப்படுவதாகதீர்ப்பளிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்க உச்ச நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அரண லக்சிறி உளவதுனவினால்தாக்கல்செய்யப் பட்ட இந்த மனு எதிர்வரும் நாளை திங்கட்கிழமை பிரதம நீதியரசர் ஜயந்தஜயசூரிய,அர்ஜுனஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் பரிசீலிக்கப்படவுள்ளது.

இலங்கை அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முறைப்படி நிறைவேற்றப்படவில்லை, அது தொடர்பாக பொதுமக்கள் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியை எள்ளி நகையாடி, நக்கல் நையாண்டி விட்டுக்கொண்டே அதன் நாடாளு மன்றக்குழுத்தலைவர்பதவியையும் அனுபவிக்கவேண்டும் என்ற ரெலோவின் ஆசையை நப்பாசை என்பதா பேராசை என்பதா என்பதே தெரியவில்லை.

மக்கள் மத்தியில் தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி, செல்வாக்கிழக்கச் செய்து, முடிந்த வரையில் அந்தக் கட்சியைச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டு கருத்துக்களைப் பரப்புகின்ற ரெலோ, தமிழ் அரசுக் கட்சியைப் பிரதான கட்சியாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை அந்தக் கட்சி விட்டுக்கொடுக்கவேண்டும் என்று நினைப்பது தமிழ் அரசுக் கட்சியில் உள்ளவர்களுக்குமுதுகெலும்போசூடு சொரனையோ இல்லை என்பதைப் போலுள்ளது.

ஏன் இப்படி என்கிறீர்களா?

ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) நேற்று மட்டக்களப்பில் செய்தியாளர்கள்கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்களைப்பார்க்கும்போது, கூட்டமைப்பின் தலைமையை ரெலோகோருவதேதமிழ்அரசுக் ☞ 2

## தேர்தல் அச்சுப் பணிக்கு மட்டும் ரூ. 600 மில்லியன் செலவாகும்

### அரச அச்சகப் பணிப்பாளர் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் அச்சுப் பணிகளுக்காக அதிகபட்சம் 600 முதல் 800 மில்லியன் ரூபாய் வரை செலவாகுமென தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகப் பணிபபாளர் நாயகம் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

வாக்குச்சீட்டின்அளவைப்பொறுத்து செலவுத் தொகை அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதித் தேர்தல்அறிவிக்கப்பட்டதன்பின்னர்அது தொடர்பான பத்திரங்கள் அச்சிடப்படும் எனஅரசஅச்சபணிப்பாளர்கூறியுள்ளார்.

தேர்தலில் அதிகாரிகளின் கடமைகளுக்கு தேவையான மக்கள் தொகை கணக்கெடுப்பு படிவங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளதாகவும் கங்காகல்பனிலியனகே குறிப்பிட்டார்.

## புதுப்பிக்கத்தக்க சக்தி விரிவாக்கத்திற்கு இந்தியா 10 மில். டொலர் நன்கொடை

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைவிரிவுபடுத்துவதற்காக இந்தியா 10 மில்லியன் டொலர் நிதியைநன்கொடையாக வழங்கியுள்ளது என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின்சிரேஷ்டஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழு பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம்ஸ்ரீமகா போதிய வளாகத்தில் எல்.ரி.எல். (ஸிவீஸி) வர்த்தகக்குழுமத்தினால் அமைக்கப்பட்ட 150 கிலோ வோட் மின்சாரத்தை உற்பத்திசெய்யக் கூடிய சூரிய சக்தி கட்டமைப்பை கையளிக்கும் நிகழ்வில்நேற்றுக்கலந்து கொண்டுஉரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## ஜனாதிபதி தேர்தலுக்கான திகதிகள் இம்மாத நடுப்பகுதியில் வெளியாகும்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள்தொடர்பில்நாங்கள் அதிகமானகரிசனைகளையும் கொண்டிருக்கின்றோம்என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்கதெரிவித்தார்.

ஜனாதிபதிதேர்தலுக்கான முன்னேற்பாடுகள்தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிதேர்தலுக்கான திகதிகள்உள்ளிட்ட உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் அடுத்த வாரம் வெளியாகும். ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பைச்செய்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு ஜுலை 17 முதல் கிடைக்கவுள்ளது. அந்த வகையில் இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் மற்றும் வாக்கெடுப்புத் திகதிகளை அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேநேரம், எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் நிதி அமைச்சின் ☞ 2

## மாணவர் மட்டுமல்ல பெற்றோரும் போதை பொருட்களை தவிருங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் மதுபானம், போதைப் பொருள்களை தவிர்த்திருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 309ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கொழும்பு, திம்பிரிகஸ்யாய, சசுமய வர்தன மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றபோது அதில்கலந்து கொண்டுஉரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள்பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், வருமானம் ஈட்டும் வழிகளிலும் மீளமுடியாத ☞ 8

## நீண்ட காலத்திற்கு சரியாத வலுவான பொருளாதாரம்

### கட்டமைக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக வலுவான பொருளாதார முறைமையொன்று கட்டியெழுப்படும் என்றும், அந்த முறைமை குறுகிய காலத்திற்கானதாக அன்றி நீண்ட ☞ 2

## கொழும்பு– நகர அதிகார சபையின் காணி முறைகேடாக குத்தகைக்கு

### கோப் குழுவில் மாட்டியது

கொழும்பில்அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 6 ஏக்கர் காணி2019ஆம்ஆண்டு பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 12 பில்லியன் ரூபாவுக்கு 99 வருட ☞ 8

## வணிக,பொருளாதார மையமாக அநுராதபுரத்தை மாற்றத் திட்டம்

### யுனொஸ்கோவின் ஆதரவையும் கேட்கிறார் ரணில்

வணிக மற்றும் பொருளாதாரமையமாக அநுராதபுர நகரத்தை மீண்டும் உலகப் புகழ் பெற்றநகரமாகமாறுவதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படுமென்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

அநுராதபுரம் ஸ்ரீ மகா போதிய வளாகத்தில் எல்.ரி.எல். வர்த்தகுழுமத்தினால் அமைக்கப்பட்ட 150 கிலோ வோட் மின் உற்பத்தி சூரியசக்திகட்டமைப்பை கையளிக்கும்நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சூரியசக்திஉள்ளிட்ட மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளை இலங்கையில்அறிமுகப்படுத்த முன்வரும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பு வழங்கும் எல்.ரி.எல்.நிறுவனத்திற்கு நன்றி கூறவேண்டும். அதனால் இந்த நிறுவனம் உலகப் புகழ்பெற்றநிறுவனமாக மாறியுள்ளது.

அவர்களின்ஆரம்பம் இலங்கையில்நிகழ்ந்தது என்பதை அவர்கள் இன்றும்மறக்கவில்லை. அதனால் ஜய ஸ்ரீ மகா போதிய வளாகத்திலும் இவ்வாறானபணிகளை முன்னெடுக்க ஆளும் தரப்பு அவர்களுக்கு அனுமதிவழங்கியுள்ளது.

எதிர்காலத்திலும் ஒத்துழைப்புக்களை வழங்குவோம். அநுராதபுர நகரத்திற்கு ஆயிரம் வருடங்கள் பழமையான வரலாறு உள்ளது. அதேபோல் அநுராதபுரம் பழமையான வர்த்தக மற்றும் பொருளாதார மையமாகவும் திகழ்ந்துள்ளது. இத்தகையபெறுமதியான நகரத்தில் பல்வேறு தொல்லியல்ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜனாதியின் ☞ 2

## வேலையற்ற பட்டதாரிகள் ஜுலை 16இல் போராட்டம்

### யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக

வடமாகாணவேலையற்ற பட்டதாரிகள் ஜுலை 16 கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

வடமாகாண வேலையற்ற ☞ 2

## திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் முஸ்லிம்களுக்காக அதிகம் தேவை

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

ஜனாஸாக்களை தாமதமின்றி கையளிக்கும் வகையில்முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மேலதிகதிடீர் ☞ 8

## இனி இது .....

கட்சியை இல்லாமலாக்குவதற்கான முயற்சிதான் என்றே தோன்றுகின்றது.

அந்தச்செய்தியாளர்கள்சந்திப்பில் ஒரு செய்தியாளர், தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டமைப்பாக வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றார்கள். அதற்குஜனாஅளித்தபதில்வருமாறு:

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாகப் போட்டியிடவேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை. குறிப்பாக கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து தமிழ்ப் பிரதிநிதி தெரிவு செய்யப்படவில்லை.இதற்குமுன்னர் 1994ஆம் ஆண்டும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து தமிழ்ப் பிரதிநிதி தெரிவுசெய்யப்படவில்லை. நாம் பிரிந்து தேர்தல் கேட்டால் அம்பாறை மாவட்டம் போன்று திருகோணமலை மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதிநித்துவம் இல்லாமல் போகலாம். அது மட்டுமல்ல மட்டக்களப்புமாவட்டத்திலும்தமிழ்ப் பிரதிநித்துவம் குறைவதற்கான சாத்தியம்தான்இருக்கின்றது.எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடவேண்டும்என்பதில்எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகள், தமிழ்த் தேசியத்தை விரும்புகின்ற கட்சிகள் என்று எல்லோரும் ஒருமித்துக் கேட்க வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடு. ஆனால், நீங்கள் கேட்ட கேள்வி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவீர்களா என்பது, வீட்டுச் சின்னம் என்பது இப்போது எங்கிருக்கின்றது என்று உங்களுக்குத் தெரியும். நீதிமன்றத்தில் இருக்கின்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரே தங்களுக்குள் அடிபட்டு நீதிமன்றத்தில்வைத்திருக்கிறார்கள். அடுத்த தேர்தலில் வீட்டுச் சின்னம் வெளியில் வருமோ என்பதே சந்தேகம். (இதைச்சொல்லும்போது அவரது முகத்தில் ஒரு நக்கல், நையாண்டிச்சிரிப்புகொட்டுகின்றது) எனவே தேர்தல் வரும்போது அது பற்றி நாம் முடிவெடுப்போம் என்கிறார்.

இந்தப்பதில்மூலம்தமிழ்அரசுக் கட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான தகவலைப் பரப்புவதில் அவர் குறியாக இருக்கின்றார். தமிழ் அரசுக் கட்சி தொடர்பில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் கட்சியின் செயற்பாட்டுக்கு எந்தவிதத் தடைகளும் இல்லை. அந்தக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் தலைமையிலான நிர்வாகக் குழு செயற்படுவதற்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடையை மதித்து அந்தக் கட்சி முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் தலைமையில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. கட்சியின் மத்திய குழுக் கூட்டங்கள், அரசியல்குழுக்கூட்டங்கள்எல்லாம் நடக்கின்றன.முக்கியமாகக்கட்சியின் தேர்தல்சின்னமானவீட்டுச்சின்னம் முடக்கப்படவில்லை. வழக்கில்கூட ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து அதனைமுடிவுறுத்தவும்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இன்று வவுனியாவில் சந்திக்கவுள்ள வழக்கில்தமிழ்அரசுக்கட்சி சார்பில் சம்பந்தப்பட்டிருப்பவர்களின் சட்டத்தரணிகள் அடுத்த தவணையின்போதுநீதிமன்றத்தில் முன்வைக்கவுள்ள ஒருமித்த கருத்து என்ன என்பதை இறுதி செய்யவுள்ளனர். ஏற்கனவே இதற்கான இணக்கம் எட்டப்பட்டுவிட்டது, எனினும் நீதிமன்றிற்கு வழங்கப்போகும் எழுத்து வடிவத்தில் என்ன குறிப்பிடுவது என்பதை இன்றைய கூட்டத்தில் அவர்கள் அனைவரும் தெளிவாக வரையறுப்பார்கள். அதனை நீதிமன்றில் சமர்ப்பித்த பின்னர் இந்த விவகாரம் ஒரு வகையில் ஒரு முடிவுக்கு வரும். ஒருவேளை வழக்கு இப்படியே தொடர்ந்தால்கூட கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவிதத் தடைகளும்இன்றுவரைகிடையாது. அப்படியிருக்கும்போது வீட்டுச் சின்னத்தில் போட்டியிட முடியாது என்கிற பச்சைப் பொய்யை மக்கள் மத்தியில் பரப்பும் ரெலோ, அந்தச் சின்னத்தில் பெறப்பட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கான தலைமையையும் எதிர்பார்ப்பது வில்லத்தனமன்றி வேறென்னவாக இருக்கமுடியும்? தமிழ் அரசுக் கட்சியினர் சூடு சொரணையற்ற, முதுகெலும்பற்றவர்கள் என்று எண்ணுவதைத் தவிர்த்து வேறென்னவாக இருக்கமுடியும்?

அவரது இந்தப் பதிலில் கவனிக்கவேண்டிய மற்றொரு விடயமும்உள்ளது.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக போட்டியிடுவது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கூட்டமைப்பிலிருந்து வெளியேறியகட்சிகள்மற்றும்தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் கட்சிகள் எல்லாம் ஒன்று சேரவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் கூறுகின்றார். அதாவது கூட்டமைப்பை விட்டு வெளியேறிய கட்சிகள்என்றால்தமிழ்க்கொங்கிரஸ், ஈபிஆர்எல்எவ், தமிழ் அரசுக் கட்சி. இதில் கொங்கிரஸ் இவர்கள் தலையால் கிடங்கு கிண்டினாலும் திரும்பிவந்துசேராது. ஈபிஆர்எல்எவ் ஏற்கனவே ஜனநாயகக் கூட்டணியில் இருக்கின்றது. ஆக மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சிதான் வந்துசேர வேண்டும். அதாவது, அவர்கள் இதுவரையில் கூறிவந்த நாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிலிருந்து வெளியேறிய தமிழ் அரசுக் கட்சி மீண்டும் வந்து சேரலாம். ஆனால், குத்துவிளக்குச் சின்னத்தில்தான் என்பதைத்தான் அவர் சொல்லாமல் சொல்கிறார். அதுதான் தமது நிலைப்பாடு என்றாலும் வீட்டுச் சின்னத்தின் கீழான நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமைப் பதவியைக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற ரீதியில் செல்வத்துக்குத் தரவேண்டும் என்றும் கேட்கிறார். என்னவொரு தினாவெட்டு, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களை எவ்வளவு மதிகெட்ட மாந்தர்கள் என்றுநினைத்திருந்தால்இப்படிப்பட்ட நக்கல், நையாண்டித்தனம் எல்லாம் வரமுடியும்? தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய தலைவருக்கு இதனை 'டீகோட்' பண்ண முடியவில்லை என்றால் யாராவது அவருக்கு அதனைப் புரிய வைக்க முயற்சியுங்கள்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் ஜனா கூறிய மற்றொரு விடயமும் கவனத்திற்குரியது. நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் என்ற வகையில் சம்பந்தருக்குப் பின்னர் தான்தான் மூத்தவர், 1989இல் தெரிவு செய்யப்பட்டவர், தனக்குப் பின்னர் சித்தார்த்தன், 1994இல் தெரிவு செய்யப்பட்டவர், மூன்றாவது முது நிலையில் செல்வம், 1998இல் இருந்து, அதாவது கூட்டமைப்பு உருவாவதற்கு முன்பிருந்து இன்றுவரை 26 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திற்குத்தெரிவானவர் அவர் என்கிறார்.

ஆக, கால் நூற்றாண்டு காலம் தொடர்ச்சியாக நாடாளுமன்றப் பதவியை வகித்த பின்னரும் அதை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்கும் நோக்கமோ நல்லெண்ணமோ செல்வத்துக்குக் கிடையாது. இறுதி வரைக்கும் அவரே நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பார். இருந்துவிட்டுப் போகட்டும், அவது அவரைத் தெரிவு செய்பவர்களது தலைவிதி. என்னுடையகேள்விஎல்லாம்இந்தக் கால் நூற்றாண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பயணத்தில் செல்வம் அடைக்கலநாதன் ஒரு தமிழ்த் தலைவராகத் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தந்தவைகள் என்ன? ராஜபக்சக்களையும் ரணிலையும் அடிக்கடிதனியாகப்போய்ச்சந்தித்து கட்சியில் தனக்கு நெருக்கமாக இருக்கும்வர்த்தகருக்காகதண்ணீர் இல்லாத வவுனியா மாவட்டத்தில் கரும்புப்பண்ணைகளையும்சீனித் தொழிற்சாலையையும் அமைக்க அனுமதி பெற்றதைத் தவிர அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் எந்த உரிமையைப் பெற்றுக்கொடுத்தார்? ஏதாவது இருந்தால் எனது மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராவதற்கான குறைந்தபட்சத் தகுதியாவது அவருக்கு இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டிருக்கவேண்டும், அப்படிச் செய்யப்படவில்லை, அதனால் 19ஆவது திருத்தம் தொடர்பாக மக்களின்கருத்துஅறியப்பட்டுஅந்தத் திருத்தம் அங்கீகரிக்கப்படும்வரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்பை மீறும் செயல் என்று உயர் நீதிமன்றம் அறிவிக்கவேண்டும்என்றுமனுவில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் இன்னும்இருதினங்களின்பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்க இருக்கும் நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பு தேர்தல் நடத்தப்படுமாஇல்லையாஎன்பதைத் தீர்மானிப்பதற்குமிகமுக்கியமானது என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்த வுள்ளளோம். அதேபோன்று உதவித்தேர்தல் ஆணையாளர்கள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளோம்.

மேலதிகமாக, ஜனாதிபதிதேர்தல் தொடர்பில் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. உயர்நீதிமன்றம்உத்தரவொன்றை பிறப்பிக்கும் வரையில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் எமக்கு சட்டரீதியான எந்தப்பிரச்சினைகளும் இல்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## புதுப்பிக்கத்தக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டுவருடங்களுக்கு முன்பு எல்.ரி.எல். வர்த்தக நிறுவனத்தினால் ருன்வெலி மகா சாயவில் மின்சார ஒளிக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டது. அப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக அந்த நிகழ்வில் கலந்துகொண்டார். எல்.ரி.எல். நிறுவனம் மின்சார சக்தி துறையில் பெரும் வேறுபாடுகளை ஏற்படுத்திய நிறுவனம்.

இலங்கை தனது தொழிலை ஆரம்பித்து சர்வதேச அளவில் வெற்றி பெற்றுள்ளது. இந்த நிறுவனத்தின்அர்பணிப்பேஅதற்குக் காரணமாகும். 2002ஆம்ஆண்டில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆட்சியைபொறுப்பேற்றுக்கொண்ட வேளையில் 18 மணித்தியால மின்வெட்டு காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற வேளையில் 13 மணித்தியால மின் வெட்டு காணப்பட்டது. ஆனால் ஆறு மதங்களுக்கு அந்த நிலைமையை மாற்றியமைத்து நாட்டில் நல்ல நிலைமையை ஏற்படுத்த ஜனாதிபதியால் முடிந்தது.

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை விரிவுபடுத்த இந்தியாவிடமிருந்து 10 டொலர் மில்லியன்கள் நன்கொடையாக கிடைத்திருக்கிறது. அதன்படி 100 டொலர்மில்லியன்பெறுமதியானதாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பலப்படுத்த ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது என்றார்.

## வேலையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கபில்டன் போல் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தின் நோக்கம் எமக்கான வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வது மாத்திரமன்றி எதிர்காலஇளையதலைமுறைகளும் எம்மைப்போல் அவலநிலையை எதிர்கொள்ளாமல் இருக்கும் வகையிலான கல்வி சீர்திருத்தை வலியுறுத்துவதுமாகும்

.பட்டதாரிகளின் வேலையில்லா பிரச்சினை என்பது பட்டதாரிகளை மாத்திரமல்ல அவர்கள் சார்ந்த குடும்பங்களையும் சமூகத்தையும் வாழ்வாதார மற்றும் பொருளாதார ரீதியாக வெகுவாக பாதித்துள்ளது. எதிர்காலத் தலைமுறைகளையும் முழு சமுதாயத்தையும் மிக மோசமாகப் பாதிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

எனவே தற்போதைய தேர்தல் காலத்தில்எமக்கானபிரச்சினைகளை வெளிக்கொணர்வதன் மூலம் ஏதேனும்ஒருவகையில்சாதகமான வாய்ப்பினை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

போராட்டங்கள் மூலம் மட்டுமே எங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரை நிதர்சனமான உண்மை. எனவே இதனை உணர்ந்து அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் ஒன்றிணைந்து தொழினல் உரிமைக்கான ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கவும் - என்று கபில்டன் போல் மேலும் தெரிவித்தார்.

## வணிக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளருடன் கலந்துரையாடிகலாசார முக்கோண வலயம் ஆரம்பிக்கப்பட்டது. பொலன்னறுவை, சீகிரிய, தம்புள்ளை, கண்டி, அநுராதபுரம் போன்ற நகரங்கள் இதனால் பிரசித்தமடைந்தன. அதன் பின்னர் எந்த புதிய திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் நாம் இப்போது இந்த நகரத்தில் தொல்லியல் ஆய்வு பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

தற்போது காம்போடியாவின் அங்கோர் நகரில் யுனெஸ்கோ அமைப்பு பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் நிதியுதவியுடன் பெரிய அளவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுத்து வருகிறது. 30- - 40 வருடங்களாக இந்த பணிகள் இடம்பெறுகின்றன. அது போலவே யுனெஸ்கோவினால் பிரான்ஸ் உதவியுடன் லாவோஸ்- இலுவாங் பிரபாங் நகரத்திலும் அந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அநுராதபுர நகரத்தில் இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் தொல்லியல்திணைக்களம்மற்றும் கலாசார முக்கோண வலயம் ஆகிய இரு தரப்பினருக்கும் இந்த பணிகளை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

அதேபோன்றுமகாவிகாரையில் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள டர்ஹெம் பல்கலைக்கழகத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. நாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி அந்தப் பணிகளைவும் விரைவில் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன். அந்த பணிகள் கலாநிதி பிரசன்ன குணவர்தனவினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மகாவிகாரைஎன்பதுஅநுராதபுர வரலாற்றின் ஒரு பகுதியாகும். அதனால் அநுராதபுர நகரம் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பின் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன்.

நீண்ட காலங்களுக்கு இந்த நகரத்தின்அகழ்வாராய்ச்சிபணிகளை மேற்கொள்ளுமாறு அவரிடத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளேன். இந்த பணிகளின்போது எமக்கு ஒத்துழைக்க பல்வேறு பல்கலைக் கழகங்களும் முன்வந்துள்ளன. இவ்வாறு அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல தீர்மானித்துள்ளோம்.

மதுரை, காஞ்சிபுரம், தஞ்சாவூர் பற்றி பேசுகின்ற நாம் அதன் நான்காவது நகரமான அநுராதபுரத்தை மறந்துவிட்டோம். எனவே அநுராதபுர நகரத்தின் அபிவிருத்திக்காக இந்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.இதற்கு இணையாக அநுராதபுரத்தில் பல ஹோட்டல்களையும் அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனால் இந்த நகரத்துக்கு பெரும் முன்னேற்றம் ஏற்படும் என்றார்.

## நீண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திற்கு நாட்டின் பொருளாதாரம் சரிவடையாமல் பாதுகாக்கும் வகையில் வலுவாக கட்டமைக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற நவீன வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர்களுக்கு கையளிக்கும்நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்கு அமைவாக வடமேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக இந்த பாடசாலையும் விளங்குகிறது.

இன்றளவில் பாடசாலை அபிவிருத்தி கண்டுள்ளது. இந்த பாடசாலைக்கு புதிய 3 மாடிக் கட்டடம் ஒன்றை அதிபர் கோரினார். அதனைப் பெற்றுக்கொடுக்குமாறு கல்வி அமைச்சுக்கு அறிவிப்பேன்.

நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதால் பாடசாலையின் 77 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவிற்கு வரும் வேளையில் முழுமையான வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி நிலையமொன்றை அமைத்துத்தர ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த பாடசாலை குறித்து இங்கு பேசிய மாணவர்கள் தங்களுக்குசிறந்தஎதிர்காலமொன்று தேவை என்பதை கூறினர். கடந்த இருவருடங்களைத் திரும்பிப் பார்க்கும் போது அந்த கோரிக்கை நியாயமானதாகும். நாம் எதிர்காலத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியுமென சிந்திக்க வேண்டும். நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டிருப்பதால் எதிர்காலத்துக்கான முதல் அடியை வெற்றிகரமாக வைத்திருக்கிறோம்.

தற்போது பின்பற்றும் பொருளாதார முறைமைகள் மூலம் முன்னேற்றத்தை அடைய முடியாது. இதனால் ஒரு நாடு என்ற வகையில் மேலும் கடன்படுவதை மாத்திரமேசெய்யமுடியும்.அவ்வாறு செய்தால் இந்தப் பிள்ளைகள் எதிர்பார்க்கும் சிறந்த எதிர்காலமும் கிடைக்காது. அதேபோல் இன்னும் 15 வருடங்களில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படும். அதனால் நாடாக முன்னோக்கிச்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். குடா மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாம்

## பிரதமர் கூறுகிறார்



யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இதன் போது சீன அரசின் உதவியுடன் முட்டை அடைகாக்கும் இயந்திரங்கள் பகிரந்தளிக்கப்பட்டதுடன், குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசியும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர்-

யாழ்.குடாநாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது எனத் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உள்ளூராட்சி நிர்வாக பகுதியில் கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்கான விசேட ஏற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளோம். பிரதமர் என்ற வகையில் நீங்கள் அனைவரும் அடைந்துள்ள முன்னேற்றத்தை அவதானிக்கவும், வழங்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் நாம் இன்று இருக்கும் இடத்தைப் பற்றிய சில கருத்துக்களைப் பெறவும் இங்கு வருகைதர கிடைத்தமையை பாக்கியமாக கருதுகிறேன்.

சேவைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் உறுதிபூண்டுள்ளனர். எனவே, அபிவிருத்திக்குத் தேவையான அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது இந்தப் பிரதேசத்திற்கு மிகவும் முக்கியமானது.

விவசாயிகளின் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். அனைத்து விவசாயிகளும் தனியார் துறையை சேர்ந்தவர்கள். உரிமைகளின் அடிப்படையில் அல்லது சிறு விவசாயிகள் என்ற வகையில் அவர்கள் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு தனிப்பட்ட பங்களிப்பாளர்களாக உள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் கல்விக்கு அதிகூடிய முன்னுரிமையை வழங்குவதற்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியைப் பெறுவதற்கும் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கும், பின்னர் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் துறைகளில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும். அதற்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும்.

எமது நாட்டில் வறுமை நிலை திருப்திகரமாக நிர்வகிக்கபட்டுள்ளது. எந்தவொரு பொருளாதாரத்திலும், எந்த நாட்டிலும் வறுமை ஒரு முக்கிய பிரச்சினை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். செல்வந்த நாடான அமெரிக்காவில் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

எனவே, உலகின் அனைத்துப் பொருளாதாரங்களும் வறியவர்கள் தொடர்பில் இக்கட்டான சூழலை எதிர்கொண்டுள்ளன. வடமாகாணத்தின் பின்தங்கிய கிராமங்களைச் சேரந்த குறைந்த வருமானம் பெறும் மக்கள் குறித்து அதிகம் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், க.வி.விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யதாமினி குணவர்தன, பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# பல லட்சம் ரூபா பெறுமதியிலான கோவில் நகைகள் யாழில் மாயம்

## மக்கள் போராட்டத்தில் குதிப்பு







யாழ். ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புளியங்கூடல் முத்து விநாயகர் ஆலயத்தின் சுமார் 60 பவுண்களுக்கு மேற்பட்ட நகைகள் காணாமல் போனமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். புளியங்கூடல் சந்தியில் இருந்து ஆரம்பமான குறித்த மக்கள் பேரணி, பிரதான வழியாக வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் முத்து விநாயகர் ஆலயத்தை சென்றடைந்தது. ஆலயத்தின் முகவாயிலில், 'பிள்ளையாரின் நகை பணம் திருடியவனை வீதிக்கு கொண்டுவா' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆண், பெண் இருபாலாரும் சிதறு தேங்காய் உடைத்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

எமது ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒரு திருட்டு சம்பவமாக கருதும் நிலையில் குறித்த நகைகளையும் பணங்களையும் திருடியவர்கள் ஆலய நிர்வாகத்தில் உள்ளவர்கள் தான் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், திறப்பை காணவில்லை என்றபோது, எல்லோரையும் அழைத்து குறித்த பெட்டியை உடைத்து அதில் இருந்த நகைகள் பணங்களை ஆலய நிர்வாகம் எடுத்து பாதுகாப்பாக வேறொரு திறப்பை போட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

ஆகையால், மேற்படி களவு ஆலய நிர்வாகத்திற்கு தெரிந்து இடம்பெற்றிருக்கக் கூடும் என்பது எமது சந்தேகமாக உள்ளது. - எனக் கூறியுள்ளனர்.

அதேவேளை, தற்போதைய சந்தை நிலைவரப்படி, காணாமல் போன நகைகள் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# முஸ்லிம் மாணவர்களின் மத சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு அரசிடம் வலியுறுத்து

இலங்கையில் பதிவாகிவரும் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புணர்வு மற்றும் பக்கச்சார்பு சம்பவங்கள் குறித்து மிகுந்த கரிசனை அடைவதாகத் தெரிவித்திருக்கும் 'அனைவருக்கும் நீதி' அமைப்பு, முஸ்லிம் மாணவர்களின் மதசுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது. திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் க.பொ.த உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிய 70 முஸ்லிம் மாணவிகளின் பெறுபேறுகள், அவர்கள் காதை மறைக்கும் விதமாக ஹிஜாப் அணிந்து வந்ததாகக் குறிப்பிட்டு உரிய காலப்பகுதியில் வெளியிடப்படாமல் இடைநிறுத்திவைக்கப்பட்டு, பின்னர் வெளியிடப்பட்ட சம்பவம் குறித்து 'அனைவருக்கும் நீதி' எனும் அமைப்பால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு - இலங்கையில் பதிவாகிவரும் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புணர்வு மற்றும் பக்கச்சார்பு சம்பவங்கள் குறித்து மிகுந்த கரிசனையடைகின்றோம். அண்மையில் திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் 70 முஸ்லிம் மாணவிகளின் உயர் தரப்பரீட்சை பெறுபேறுகள் வெளியிடாமல் இடைநிறுத்திவைக்கப்பட்டன.

பரீட்சையின் போது காதுகள் மூடப்பட்டிருக்கக்கூடாது என்ற கொள்கையே அதற்குக் காரணமாகக் கூறப்பட்டது. இருப்பினும் இக்கொள்கை தமது மத விழுமியங்களைப் பின்பற்றுவதற்கும், ஹிஜாப் அணிவதற்குமான தெரிவை மேற்கொண்ட முஸ்லிம் பெண்களை ஒடுக்கும் வகையிலும், பெரிதும் பாதிப்பதாகவும் அமைந்திருக்கின்றது. அதுமாத்திரமன்றி இது இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான மதரீதியான ஒடுக்குமுறை தொடர்வதற்கு வாய்ப்பேற்படுத்துகின்றது. இந்நடவடிக்கை பல்வேறு தடைகளைக் கடந்து உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு அவர்களது பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்படல் உள்ளிட்ட பல்வேறு பின்விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கையில் குறிப்பாக மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதை சகித்துக்கொள்ள முடியாத மனநிலை உருவாகிவருகிறது. இவ் வாறானதொரு பின்னணியில் மாணவர்களின் மதசுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம் என அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மலேசியாவில் இலங்கையர் உட்பட 88 வெளிநாட்டவர்கள் கைதாகினர்

மலேசியாவில் ஈப்போ நகரின் மூன்று இடங்களில் சட்டவிரோத விபச்சார நடவடிக்கைகளுக்கு எதிரான சுற்றிவளைப்பில் 88 வெளிநாட்டவர்களை அந்நாட்டு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் விபச்சார தொழில் நடைபெறுவதாக சந்தேகிக்கப்படும் ஹோட்டல் மற்றும் இரண்டு களியாட்ட விடுதிகளில் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, 21 மற்றும் 46 வயதுக்குட்பட்ட 78 பெண்கள் மற்றும் 10 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் தாய்லாந்தைச் சேர்ந்த 64 பேரும், வியட்நாமைச் சேர்ந்த 13 பேரும், நேபாளத்தைச் சேர்ந்த 4 பேரும், இந்தியாவைச் சேர்ந்த 3 பேரும், பங்களாதேஷைச் சேர்ந்த 3 பேரும் மற்றும் இலங்கைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பேராக் மாநிலத் தலைநகரான ஈப்போ, தாய்லாந்து எல்லைக்கும் கோலாலம்பூருக்கும் இடையில் சுமார் 300 கிலோமீற்றர் தொலைவில் சோங்க்லாவில் உள்ள சடாவ் மாவட்டத்திலிருந்து சுமார் 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. தாய்லாந்தைச் சேர்ந்தவர்களின் விபச்சார நடவடிக்கைகளைத் தடுக்கும் இரண்டாவது பாரிய சுற்றிவளைப்பு இதுவாகும். கடந்த வெள்ளிக்கிழமை, மலேசிய தலைநகர் மற்றும் அண்டை நாடான சிலாங்கூர் மாநிலத்தில் நடத்தப்பட்ட சோதனையில் 22 தாய்லாந்து பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## முதலில் ஒழிக்கப்படவேண்டியது பௌத்த, சிங்கள பேரினவாதமே

ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்யவேண்டும். அதற்குத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று திருவாய் மலர்ந்துள்ளார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.

மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவர் குறிப்பிடுவது இது முதற்றடவையல்ல.

"அடிப்படைவாதம் எந்த வகையில் தலைதூக்கினாலும் அதனைத் தடுப்பது நாடாளுமன்றத்தின் கடமை. ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஐ,எஸ். தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக அன்று இருந்த ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த தாக்குதல் இடம்பெற்றிருக்காது.

இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம் இவை அனைத்தும் அரசியலுடன் ஒன்றிப்பிணைந்துள்ளன. தேர்தல் முறைமையே இதற்குக் காரணமாகும்.


இனஅடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடைசெய்யவேண்டும். அதற்குத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது நாட்டிலிருந்த ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும்போது. தங்களின் அல்லது அவர்களின் கட்சியின் நலனுக்காக இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகளுக்கு இடமளித்தே அதனை மேற்கொண்டுள்ளனர்" என்று பொரிந்து தள்ளியிருக்கிறார் அவர்.

அவர் வரலாற்றை மறந்துவிட்டுப் பேசுகின்றார். இந்த நாட்டில் இனவாதக் கட்சிகள் என்று அவர் கருதும் இனங்களின் பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்சிகளின் உருவாக்கம் அதுவாக நிகழ்ந்தது அன்று. சிங்களப் பேரினவாதத்திற்கு எதிர்வினையாகத்தான் அவை எல்லாம் உருவாகின. இது சிங்கள நாடு, இங்கு சிங்களவர்களுக்கே முதலிடம், மற்றவர்கள் விரும்பினால் இருந்துவிட்டுப் போகலாம் என்று கூறும் சிங்களப் பேரினவாதப் போக்கே, இது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும்கூடச் சொந்தமான நாடு, இங்கு அனைத்து மக்களுக்கும் சம உரிமை வேண்டும் என்கிற உரிமைக் குரலை, அதற்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள், கட்சிகளை உருவாக்க வழி செய்தது என்பதை நீதி அமைச்சர் வசதியாக மறந்துவிட்டார்

இனங்களின் பெரைக் குறிப்பிடாமல் அமைந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் சிங்களப் பேரினவாதப் போக்கைக் கையாண்டு தமிழ், முஸ்லிம் மக்களை இந்த நாட்டின் இரண்டாம் தரக் குடிமக்களாக்கி அடக்கி ஒடுக்க நினைத்திருக்காவிட்டால் இனங்களின் பெயரில் அவற்றைக் காக்கவும் மீட்கவுமெனக் கட்சிகள் உருவாகியிருக்க மாட்டா.

எனவே முதலில் அழிக்கப்படவேண்டியது சிங்கள, பேரினவாதமும் பௌத்த சிங்கள தேசியவாதமும்தான். இலங்கையை விட்டு பிரிட்டிஷார் வெளியேறும் காலத்தில் நிகழ்ந்த சிங்களத் தேசிய வாதத்தின் எழுச்சிதான் இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் தேசியவாதங்களின் எழுச்சிக்குப் பிளவுக்கு வித்திட்டன என்பதை நீதி அமைச்சர் நினைவுபடுத்தவேண்டும். சிங்களத் தேசிய எழுச்சி என்பது இனவாதமாக மாற்றம்பேற்றபோதுதான் வன்முறைகளும் கலவரங்களும் பதில் வன்முறைகளும் ஆயுதப் போராட்டமும் முகிழ்த்தன. ஆக இந்த நாட்டில் இருந்து இனவாத கட்சிகளை அழிப்பதால் எந்தப் பயனும் இருக்காது. சிங்களப் பேரினவாதத்தை முதலில் தொலைத்தால் மட்டுமே அதற்கு எதிர்வினையான ஏனைய இனவாதங்களை அகற்ற முடியும். பௌத்த, சிங்கள தேசியவாதியாகத் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளும் நீதி அமைச்சர் முதலில் அந்த அடையாளத்திலிருந்து வெளியே வந்து அனைத்து மக்களுக்குமான தலைவராகத் தன்னை நிலைநிறுத்திய பின்னர் அவர் இனவாதக் கட்சிகளை ஒழிப்பது குறித்துப் பேசலாம்.



கு.கணேசன்

# கொலஸ்டிரால் நண்பனா? எதிரியா?

இன்றைய 'உடல் பருமன்' யுகத்தில், நாற்பது வயதைக் கடந்த ஆண், பெண் இருபாலரையும் அதிகம் அச்சுறுத்தும் வார்த்தை இதுதான். கெட்ட கொழுப்பு, நல்ல கொழுப்பு, எல்டிஎல், ஹெச்டிஎல் என அவரவருக்குத் தெரிந்த பெயர்களில் குழப்புவார்கள்.

நீங்கள் 'தேவர் மகன்' வடிவேலுபோல் ஒல்லியாக இருக்கும்போது தெருவில் நடந்து போனால், ஒரு பூச்சிகூட கண்டுகொள்ளாது. ஏதோ ஆசைப்பட்டு, வாய் ருசிக்குச் சாப்பிட்டு, 'தெனாலிராமன்' வடிவேலுபோல் உடல் பெருத்து, முன் வயிற்றில் தொப்பை விழத்தொடங்கினால்போதும், படாத கண்ணெல்லாம் பட்டுத் தொலைக்கும்.




"உடம்பைக் குறைங்க. எதுக்கும் ஒரு தரம் பிஎம்ஐ, கொலஸ்டிரால் எல்லாம் பார்த்துக்கோங்க கொழுப்பு கூடுறமாதிரி தெரியுது. வெறும் வயித்துல 'லிப்பிட் புரோஃபைல்' பார்த்தா கரெக்டா இருக்கும" இப்படியான இலவச ஆலோசனைகள் மத்தியமரிடமிருந்து கட்டாயம் கிடைக்கும்.

"கொழுப்பு இல்லாத பால் குடிங்க. கொலஸ்டிரால் இல்லாத எண்ணெயை வாங்குங்க" என்றெல்லாம் ஊடகங்கள் போதாத குறைக்குப் பாடம் நடத்தும். உங்களுக்கோ குழப்பம் கூடிவிடும்.

உடல் பருமனுக்கும் கொலஸ்டிராலுக்கும் என்ன சம்பந்தம்? கொலஸ்டிராலை ஏன் அந்தக் கால வில்லன் நடிகர் நம்பியாரைப் பார்ப்பதுபோலவே பார்க்கிறோம்? வாருங்கள், அதையும் பார்த்துவிடலாம்.

### கொலஸ்டிரால் விரோதியல்ல!

எல்லோரும் நினைப்பதுபோல் கொலஸ்டிரால் நமக்கு விரோதியல்ல! அது ஒரு சாதுவான சத்துப் பொருள். அதிக சக்தி தருகிற, நம் ஆரோக்கியத்துக்கு அவசியமான ஒரு கொழுப்புப் பொருள். நம் உடல் கார்போஹைட்ரேட்டைத் தயாரிப்பதில்லை புரோட்டீனைத் தயாரிப்பதில்லை. ஆனால், கொலஸ்டிராலை மட்டும் தயாரித்துக்கொள்கிறது. அப்படியானால், நமக்குத் தேவையான ஒரு 'விஐபி'யாகத்தானே அது இருக்கவேண்டும்?

கல்லீரல், குடல், அட்ரீனல், ஆண்களுக்கு விரைகள், பெண்களுக்குச் சினைப்பைகள் என உடலில் பல இடங்களில் கொலஸ்டிரால் ஃபேக்டரிகள் இருக்கின்றன. இவை தினமும் 700 மில்லி கிராம் கொலஸ்டிராலைத் தயாரிக்கின்றன. உங்கள் எடை 70 கிலோவாக இருந்தால், நீங்கள் சுத்த சைவமாகவே இருந்தாலும் சரி, உங்கள் உடலில் 140 கிராம் கொலஸ்டிரால் கட்டாயம் இருக்கும்.

### ஏன்? என்ன அவசியம்?

உடலில் செல்களின் வளர்ச்சிக்குக் கொலஸ்டிரால் அவசியம். மூளையின் செயல்பாட்டுக்குக் கொலஸ்டிரால் தேவை. கொழுப்பு உணவைச் செரிக்க, பித்தநீரைச் சுரக்க கொலஸ்டிரால்தான் தேவை. நரம்புகளைப் பாதுகாக்கும் சவ்வுகள் வளர வேண்டுமா? அதற்கும் கொலஸ்டிரால் வேண்டும். நம் உடலின் வெப்பம் சமச்சீராக இருக்க வேண்டுமானால் கொலஸ்டிரால் இருக்க வேண்டியது கட்டாயம். டீன்ஏஜில் ஆணுக்கு மீசையும், பெண்ணுக்கு மார்புகளும் வளர வேண்டுமானால் கொலஸ்டிரால் இல்லாமல் முடியவே முடியாது. சுகம் காணும் தாம்பத்தியத்துக்கும் சுகப்பிரசவத்துக்கும் உதவுகிற ஸ்டீராய்டு ஹார்மோன்களுக்கு அடிப்படையே இந்தக் கொலஸ்டிரால்தான். இப்படிப் பல வழிகளில் நமக்குக் கைகொடுக்கும் நண்பனாகத்தானே கொலஸ்டிரால் இருக்கிறது! பிறகேன் அதை எதிரியாகப் பார்க்கிறோம்? கொலஸ்டிராலை இன்னும் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் இந்தப் புதிர் விலகும்!

### கொலஸ்டிராலில் இரண்டு வகை!

நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டு, இல்லையா? அது மாதிரிதான் கொலஸ்டிராலிலும் இரண்டு வகைகள் உண்டு. கெட்ட கொலஸ்டிரால், நல்ல கொலஸ்டிரால்.

### அது என்ன கெட்டது, நல்லது?

சாதாரண கொலஸ்டிரால் அதன் இரசாயன முறைப்படி உடல் திசுவிலிருந்து குருதிக்குள் தனியாகப் போக முடியாது. அதைக் குருதியில் தூக்கிச் சென்று சுற்றுலா காண்பிக்கத் தனி வாகனம் தேவை. அதன் பெயர் 'லிப்போ புரோட்டீன்'. கொலஸ்டிரால் இதன் முதுகில் ஏறிக்கொண்டு உடலில் ஊர்வலம் வரும்போதுதான் அதன் அடுத்த பக்கம் தெரிகிறது.

'லோ டென்சிட்டி லிப்போ புரோட்டீன்', 'ஹை டென்சிட்டி லிப்போ புரோட்டீன்' என்றெல்லாம் வாய்க்குள் நுழையாத பெயர்களைச் சொல்லி உங்களை இம்சைப்படுத்த விரும்பவில்லை. முதலாவதை எல்டிஎல் (LDL) என்றும், இரண்டாவதை ஹெச்டிஎல் (HDL) என்றும் நம் வசதிக்குச் சொல்லிக்கொள்ளலாம். இவற்றைத் தயாரிப்பதும் கல்லீரல்தான்.

### சரி, இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

சுருக்கமாகச் சொன்னால், ஹெச்டிஎல் நல்ல கொலஸ்டிரால். எல்டிஎல் கெட்ட கொலஸ்டிரால். எப்படி? அது செய்யும் காரியம் அப்படி. குருதியில் எல்டிஎல் பயணிக்கும்போது, போகிற போக்கில் குருதிக் குழாய்களில் ஏற்பட்டுள்ள சிறு சிறு பிளவுகளில் படியத் தொடங்குகிறது. இதனால் -குருதிக்குழாய

(10ஆம் பக்கம் பார்க்க...)

# யாழில் திருநங்கையை கடத்திய மூன்று பேருக்கு விளக்கமறியல்

கோவிலுக்கு சென்று விட்டு திரும்பிய திருநங்கையை கடத்திச் சென்ற மூவர் ஊர்காவல்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்-

கொழும்பைச் சேர்ந்த 24 வயதுடைய குறித்த திருநங்கை புதன்கிழமை ஊர்காவல்துறை பகுதியில் உள்ள சிவன் ஆலயத்திற்கு சென்று தரிசித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த வேளை மூவரடங்கிய குழு அவரை வாகனத்தில் ஏற்றி ஆள்களற்ற பகுதிக்கு அழைத்துச் சென்றது.

அங்கு அழைத்துச் சென்று, 'இங்கே ஏன் வந்தாய்' என அந்த திருநங்கையை வின வியவேளை ஊர்காவல்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை சந்திக்க வந்ததாக தெரிவித்து அந்த இளைஞனின் தொலைபேசி இலக்கத்தை குறித்த கும்பலிடம் வழங்கினார். இதேவேளை அந்த இளைஞனுக்கு குறித்த கும்பல் தொலைபேசி அழைப்பு மேற்கொண்ட வேளை, அந்த கும்பலில் இருந்தவரின் தொலைபேசி இலக்கம் குறித்த இளைஞனிடம் ஏற்கனவே இருந்திருந்தது. இந்நிலையில் இதுகுறித்து ஊர்க்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது.

மேற்படி மூவரையும் பொலிஸார் வெள்ளிக்கிழமை கைது செய்து ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவல்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், குறித்த சந்தேக நபர்களை இனங்காண்பதற்கு அடையாள அணிவகுப்புக்கு திகதியிடப்பட்டது. (05)

# உணவகத்திற்கு 'சீல்'



யாழ்ப்பாண நகர் பகுதியில் உள்ள இரண்டு உணவகங்களுக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை நகர் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரு உணவங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வேளை, உணவகத்தில் காணப்படும் சுகாதார குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (05)

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

உடவளவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேக்குனவத்த பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என உடவளவ பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உடவளவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அமைச்சர் பந்துல திருமலைக்கு வருகை



(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான மக்கள் சந்திப்பு வேலைத்திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது. இதில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன். இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை சாலைக்கு சென்று அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதில் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அநுரகுமார திசாநாயக்க அம்பாறைக்குப் பயணம்





(தில்சாத் பர்வீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது சம்மாந்துறைக்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கா சம்மாந்துறையில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

சம்மாந்துறையின் வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாதவாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க உரையாற்றினார்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை மக்கள் கூட்டத்தில் புதிய தேசிய மறுமலர்ச்சிக்காக திசைகாட்டியைச் சூழ அணிதிரண்ட மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். (05)

# அனுர குமாரவின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்ட சிசிடிவி கமராக்கள்





(பாறுக் ஷிஹான்)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க எம்.பி பங்கேற்கின்ற கூட்டங்களில் நவீன ரக சிசிடிவி கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அவர் கலந்துகொள்கின்ற கூட்டங்களில் சோலர் பொருத்தப்பட்ட சிசிடிவி கமரா மற்றும் இதர நவீன தன்னியக்க சிசிடிவி கமராக்கள் பல ஆங்காங்கே பொருத்தப்பட்டு கூட்டங்களுக்கு வருபவர்கள் கணகானிக்கப்பட்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காரைதீவு மற்றும் சம்மாந்துறை பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி கூட்ட மேடைகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இவ்வாறான கமராக்கள் பல பொருத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, என்றும் இல்லாதவாறு கூட்டங்களுக்கு பைகளுடன் சமூகமளிப்பவர்கள் அழைக்கப்பட்டு விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். (05)



## நீண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதா? மீண்டும் பொருளாதாரம் சரிவடைய இடமளிப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இங்கிருக்கும் பிள்ளைகள் இன்னும் 50 வருடங்களுக்கு மேலாக வாழப் போகிறீர்கள். அதனால் ஆளும் தரப்பு என்ற வகையில் நாம் 2050 பற்றி சிந்திக்காமல் 2075 வரையில் தூர நோக்குடன் சிந்திக்க வேண்டியது அவசியம்.

அதனாலேயே நாட்டின் இறக்குமதி பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்ற எதிர்பார்க்கிறோம். நாட்டில் பல முறைமைகள் மாற்றப்பட வேண்டும். அதற்காகவே பொருளாதார மாற்றச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்போது விவசாய நவீனமயமாக்கல் திட்டம் மிக முக்கியமானது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் இயலுமை விவசாயிகளுக்கே உள்ளது. அதற்காகவே அவர்களுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுக்க முதலில் நடவடிக்கை எடுத்தோம். விவசாயிகள் கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நல்ல விளைச்சலைப் பெற்றுத் தந்தனர். அவர்களுக்கு நன்றி கூறும் வகையிலேயே 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இலவச காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. இதன்போது வடமேல் மாகாண மக்களுக்கு பெரும் சேவை ஆற்றப்படும்.

எதிர்வரும் காலத்தில் உலக சனத்தொகை 2 பில்லியன்களால் அதிகரிக்கப்போகிறது. 2050களில் 2 பில்லியனுக்கும் அதிகளவானர்களுக்கு உணவுத் தேவை இருக்கும். உலகத்தின் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்ய நாம் புதிய தொழில்நுட்பத்துடன் இயன்றளவு அதிக உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டும். இந்த உலர் வலயத்தில் மாத்திரம் நாம் அரிசி உற்பத்தியில் தன்நிறைவு காண முடியும். விவசாயிகளுக்கு செழிப்பு கிடைக்கும்போது அவர்களின் பணம் அநுராதபுரம், தம்புள்ளை, வவுனியா போன்ற பகுதிகளுக்கு வந்து சேரும். அதனால் அந்த நகரங்களும் அபிவிருத்தி அடையும்.

அதேபோல் இந்த மாகாணத்தில் சூரிய சக்தி வேலைத்திட்டத்தையும், சுற்றுலா வர்த்தகத்தையும் வலுப்படுத்தும் இயலுமை உள்ளது. புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை நாம் ஆரம்பிக்க வேண்டும். திருகோணமலை அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்காக இந்தியாவுடன் கைகோர்த்திருக்கிறோம். அதன் பயன்கள் அநுராதபுரத்துக்கும் கிடைக்கும்.

அதேபோல் நாம் புதிய பல்கலைக்கழகமொன்றை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். அதனால் புதிய மூன்று தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் கிடைக்கும். தொழில்நுட்பத் தெரிவுகளை வழங்க வெளிநாட்டு பல்கலைக்கழகங்களும் முன்வந்துள்ளன. நாம் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவுடன் முன்னேற வேண்டும். எதிர்காலத்திற்காக புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

சில அரசியல்வாதிகள் 5 வருடங்களில் ஆட்சி மாற்றம் செய்வதை பற்றிச் சிந்திக்கிறார்கள். இல்லாவிட்டால் அதிகாரத்தில் இருப்பவரை விரட்டியடிப்பது குறித்து சிந்திக்கிறார்கள். இவ்வாறான அரசியலின் பயனாகவே நாட்டின் பொருளாதாரம் சரிவு கண்டது. அதனால் நாட்டின் பொருளாதார நிலைமையும் சரிவடைந்தது.

இந்நாட்டில் முதல் முறையாக தேசிய மட்டத்தில் சிந்திக்கக்கூடிய அரசியல் குழுவொன்று உருவானது. எந்த அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் நாட்டை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம். அடுத்த ஐந்து வருடங்களில் ஒரு நாடாக நாம் முன்னேறப் போகிறோமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். அதனால் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து செயலாற்றுவோம் - என்றார்.

## திடீர் இறப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறப்பு விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிரிழக்கும் முஸ்லிம்களுக்கான (ஜனாஸாக்கள்) இறுதிச் சடங்கு நடவடிக்கைகளை சமய வழிமுறைக்கு அமைய, 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றுவதற்கு வசதியாக இந்த நியமனங்களை மேற்கொள்ளுமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம் மக்களின் (ஜனாஸாக்கள்) இறுதிச் சடங்குகள் ஏனைய மத சடங்குகளைபோலன்றி 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் பல்வேறு காரணங்களினால் இதனை உரிய காலத்துக்குள் நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை இந்த மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது நல்லாட்சியின் நெறிமுறை பொறுப்புகளுக்கும் முரணானதாகும்.

எனவே, முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் மரபு ரீதியான கடமைகளை எளிதாக்கும் வகையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து மரண விசாரணை அதிகாரிகள் பலரை நியமிக்க பரிந்துரைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சிவபூமி தேவார மடம் இன்று வட்டுக்கோட்டையில் திறப்பு

சிவபூமி அறக்கட்டளையினால் அமைக்கப்பட்ட வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதான வீதி, அராலி தெற்கில் (வட்டுக்கோட்டை பொதுச் சந்தைக்கு முன்பாக) அமைந்துள்ள இந்தத் தேவார மடத்தினை சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் சிறீ. சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைக்கின்றார்.

சித்தன்கேணி வாசுதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தர்மபுரம் ஆதீன திருக்கேதீச்சர மடத்தைச் சேர்ந்த சிறீ மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவார்கள். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம், இந்தியத் துணைத் தூதரகத்தைச் சேர்ந்த ராம் மகேஸ், வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், இந்து கலாசார அமைச்சுப் பணிப்பாளர் அனிருத்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றுவர். உமாகரன் இராசையாவின் சிறப்புரையும் இடம்பெறும். பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகளின் திருமுறை நடன ஆற்றுகையும் இடம்பெறும்.









### பெருந்தோட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத்தகைக்கு வழங்கப்பட்டமை நாடாளுமன்றத்தின்'கோப்'குழுவால் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், அனுமதிக்கப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர்சபையின்அனுமதியைப் பெறாது வேறு நிபந்தனைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதும் அறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த ஒப்பந்தத்தின் வரைபு தொடர்பில் சட்டப் பணிப்பாளருக்கு எதிராக ஒழுங்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருவதாக கோப் குழு முன்னிலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தலைமையில் அண்மையில் கோப் குழு கூடியபோதே இந்த விடயங்கள் தெரியவந்தன.

குறித்த காணியை பணிப்பாளர் சபையின் உத்தியோகப்பூர்வ அனுமதியின்றி குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக அதிகாரசபைக்கு 330 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரங்கள் தொடர்பாக முறையான அறிக்கையை 2 வாரங்களுக்குள் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

### பால்நிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கஷ்டங்கள் நிறைந்த பெரும் அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புற வறுமைகூட வியாபித்துள்ளது. இதனால் சமூக விரோத நடவடிக்கைகள் இன்று சமூகத்தில் அதிகரித்துள்ளன.

சகல பாடசாலை மாணவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகாது நடுநிலை சிந்தனையோடு செயற்படவேண்டும். நேரிய சிந்தனையோடு பாடசாலை பிள்ளைகள் வளர வேண்டும்.

மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகக் கூடாது. மதுப் பழக்கம் ஒரு நாகரீகமற்ற செயலாகும். பெற்றோர்களும் மதுவைத் தவிர்க்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோரைப் பின்பற்றுகிறார்கள். எனவே இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி நடந்துகொள்ளவேண்டும்.

சரியானதைச் செய்து சரியான பாதையில் செல்ல வேண்டும். பெரியவர்களை மதிக்க வேண்டும். பணிவாக நடந்து கொள்ள வேண்டும். தகவல் தொழில்நுட்பத்துறையில் பிரவேசித்துஸ்மார்ட்கல்வியை முன்னெடுக்க வேண்டும்.

கல்வி எனும் பெறுமதிமிக்க வளத்தை எவராலும் ஒருபோதும் திருட முடியாது. எனவே பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும் நல்ல நாகரீக வாழ்க்கையும் அமைத்துக்கொடுக்க சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் இனத்துவ சமநிலை பேணப்படவேண்டும்

## நாவிதன்வெளியில் ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகத்தின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், நாடாளுமன்ற ஆட்சியை தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் காணி உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராக போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது.

தமிழ்- முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதரர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும்.

அதுபோல முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். மக்களினுடைய உரிமை சார்ந்த விஷயங்களில் நாங்கள் எப்போதும் கரிசனையுடனேயே தான் இருக்கிறோம் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் டி- 100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் நாவிதன்வெளி அமீரலி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

எங்கள் மண்ணின் வளங்களை பயன்படுத்தி எத்தனை தொழிற்பேட்டைகளை உருவாக்க போகிறீர்கள் என ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்போம். அவர்களை ஆதரிக்க முன்னர் அம்பாறை மாவட்ட இளைஞர் யுவதிகள் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கப்போகிறீர்கள் என்று கேட்போம். எங்களின் மூதாதையர்கள், தாய் தந்தைகள் தந்த நிலங்களுக்கு உரிமை கேட்க பிரதேச செயலகங்களில் பிச்சை பாத்திரம் சுமக்கும் சமூகமாக நாம் இருக்க முடியாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒருவர் அமைச்சராகவும், நால்வர் பிரதி அமைச்சராகவும்



உருவாகும் இயக்கமல்ல. எங்களின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், பாராளுமன்ற ஆட்சியை தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராக போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராளிகளோ, முஸ்லிம் சமூகத்தினரோ தளர்ந்து விடக்கூடாது. தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் எமது பிரதேசங்களின் செயலாளர்கள், உதவி செயலாளர்களில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். அதுபோல முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும் எனும் நிலை உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்கவேண்டிய நேரத்தில் இருக்கிறோம். நாவிதன்வெளி மக்களினுடைய உரிமை சார்ந்த விடயங்களில் நாங்கள் கரிசனையுடனையே தான் இருக்கிறோம்.

இன்னும் நம்முடைய மண்ணில் நாம் உரிமைகளை வென்றவர்களாக கௌரவத்துடன் வாழ வேண்டிய கட்டத்திற்கு வரவில்லை. தேர்தலொன்றை எதிர் நோக்கி இருக்கும் நாம் இருக்கின்ற மூன்று மாத கால அவகாசத்தில் மட்டுமல்லாது ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பு வருகின்ற காலத்திலும் தனிமனித கௌரவம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையை உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு எங்களுடைய ஆதரவை வழங்குவதாக இருந்தால் எமது பிரதேசங்களின் பிரச்சினைகள், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை பற்றி எழுத்துமூல ஒப்பந்தமொன்றை செய்யவேண்டும். அதில் நாவிதன்வெளி பிரதேச பிரச்சினைகள், காணி உரிமைகள், கல்முனை மாநகர மக்களின் பிரச்சனைகள், அம்பாறை மாவட்ட முஸ்லிங்களின் பிரச்சினைகள், கிழக்கு முஸ்லிங்களின் பிரச்சினைகள், தேசிய ரீதியாக முஸ்லிங்கள் எதிநோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஒப்பந்தம் பண்ணுவது காலத்தின் தேவையாக உள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் நடந்த போதும் சரி, ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நடந்த போதும் சரி தமிழ் கட்சிகள் வட-கிழக்கு இணைப்பு, சமஸ்டி என்றெல்லாம் கேட்பார்கள். பிறகு பார்த்தால் இரண்டாவது விடயமாக கல்முனை மாநகர பிரச்சினைக்கு தீர்வு தரவேண்டும் என்றும் கல்முனையை நீதியற்ற, நியாயமற்ற விதத்தில் துண்டாடவும் கேட்பார்கள். மரணித்த சம்பந்தன் ஐயா கடந்த ஜனாதிபதி வாக்கெடுப்பின் போது இதுவிடயமாக டலஸ் - சஜீத் அவர்களுடன் ஒப்பந்தம் பண்ணினார். இவர்களின் ஒப்பந்தம் என்னவென்று காலையில் பார்த்தால் கல்முனையை பலியிட ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருந்தது.

இவைகளையெல்லாம் அவதானித்துக்கொண்டு இவ்வாறான சதிகளை முறியடிக்க பலவகைகளிலும் போராடிக் கொண்டு இருக்கிறோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் நம் சமூகத்திற்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றார். எனவே எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் அவர் ஊடாக நாங்கள் யாருடன் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் பேசப்போகின்றோமோ அவர்களுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஒப்பந்தமாக எழுதி கைச்சாத்திட போகிறோம். அது 50-100 பக்கங்கள் கொண்ட ஒப்பந்தங்களாக இருந்தாலும் சரி அதனூடாக இலங்கை முஸ்லிங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை காணவேண்டும். - என்றார். (05)

# கொலஸ்டிரால்.........

தடித்து குருதி அழுத்தம் அதிகரிக்க வழிசெய்கிறது. அப்போது முதல் முறையாக 'பிபி பேஷண்ட்' என்ற முத்திரை குத்தப்படுகிறது. "உப்பைக் குறைங்க, கொழுப்பைக் குறைங்க" என்கிற ஆலோசனை ஆரம்பமாகிறது.


நாக்குக்கு அது புரிகிறதா? எது வேண்டாமோ அதைத்தான் அதிகம் தேடி ஓடுகிறது. நமக்கும் "சாப்பிட வேண்டிய வயதில் சாப்பிடாமல் பிறகு எப்போது சாப்பிடுவதாம்?" என்று சொல்லத் தோன்றிவிடுகிறது. வாரம் தவறாமல் வீக் எண்ட் பார்ட்டியில் சாப்பிட்ட பர்கரும் கிரில் சிக்கனும் கொடுத்த கூடுதல் கொலஸ்டிரால் குருதிக் குழாயின் உள்ளளவைக் குறைத்துவிடுகிறது. இது குருதி ஓட்டத்தைத் தடைசெய்கிறது. பாசி படிந்த தண்ணீர்க் குழாய் அடைத்துக்கொள்கிற மாதிரி அடைத்துக்கொள்கிறது.

கொஞ்சம் யோசியுங்கள். இதயத்துக்குச் செல்லும் குருதிக் குழாயில் இந்த எல்டிஎல் படிந்து அடைத்துவிட்டால் என்ன ஆகும்? மாரடைப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். நீங்கள் நெஞ்சுவலிக்காக மருத்துவரிடம் சென்று, இசிஜி, ஆஞ்சியோகிராம் என ஏதாவது எடுத்துப் பார்த்திருந்தால், 'அத்திரோஸ்கிலிரோஸிஸ் ஆரம்பமாகிவிட்டது. தர்ப்டி பர்சென்ட் அடைப்பு இருக்கு. கொலஸ்டிராலைக் கட்டுப்படுத்த வேண்டியது கட்டாயம்' என்று உங்கள் கார்டியாலஜிஸ்ட் எச்சரித்திருப்பாரே, அது இதுதான்.

சரி, இதுவரை நண்பனாக இருந்த கொலஸ்டிரால் இப்போது எதிரியானது எப்படி?

நம் கல்லீரல் தானாகவே கொலஸ்டிராலை தயாரிப்பது ஒருபுறம். நாம் சாப்பிடும் உணவிலிருந்து கிடைக்கும் கொழுப்பிலிருந்து கொலஸ்டிராலைத் தயாரிப்பது இன்னொருபுறம். நாம் சாப்பிடும் உணவில் 20மூ வரை கொழுப்பு இருக்குமானால், இந்த இரண்டுவித கொலஸ்டிரால் உற்பத்தியும் சரியாகவே இருக்கும். அதாவது, தினமும் 27 கிராம் கொழுப்பு, 35 கிராம் நட்ஸ் மற்றும் விதைகள் எடுத்துக்கொண்டால் நெய், வெண்ணெய், பாமாயில் ஆகியவற்றைத் தினமும் 10 கிராமுக்கு மேல் பயன்படுத்தாமல் இருந்தால் கொழுப்பு குறித்து அச்சப்பட தேவையில்லை.

இந்த அளவு அதிகமாகும்போதுதான் பிரச்சினை. அதிலும் குழம்பாக உட்கொள்ளப்படும் மாமிச உணவிலிருந்து கிடைக்கும் கொழுப்பைவிட வறுத்த, பொரித்த, எண்ணெயில் குளித்த, பதப்படுத்தப்பட்ட, பாக்கெட்டில் உறங்குகிற உணவிலிருந்து கிடைக்கும் கொழுப்புதான் முக்கிய எதிரி. அளவுக்கு மீறி உடலுக்குள் நுழையும் இந்த வகை கொழுப்பைக் கல்லீரல் பித்தநீரில் சேமித்துக்கொள்ளும். தொப்பை விழுமளவுக்குக் கொழுப்புணவுகளைத்



தொடர்ந்து சாப்பிடும்போது இதுவரை சேமித்துவைத்த கொழுப்பை கொலஸ்டிராலாக அது மாற்றிவிடும். அப்போது உடலுக்குள் கொலஸ்டிரால் உற்பத்தியாவது தேவைக்கு அதிகமாகும். பிறகென்ன, நம் ஆரோக்கியத்துக்கு ஆபத்து ஆரம்பமாகும்.

### நண்பனும் எதிரிதான் , எப்படி?

சரியான வோல்டேஜில் எரியும் வண்ண விளக்குகளின் வெளிச்சத்தை நம்மால் ரசிக்க முடியும். அதேநேரம் வோல்டேஜ் அதிகமாகி மின்னல்போல் வெளிச்சம் கொட்டினால் அதை ரசிக்க முடியுமா? அப்படித்தான் அளவோடு உணவு சாப்பிடும்வரை கொலஸ்டிரால் நமக்கு நண்பன். அளவுக்கு மீறி சாப்பிட்டு, உடல் பருமனுக்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டால், நண்பனும் எதிரிதான்.

உடலின் அதிசயத்தைப் பாருங்கள். ஆபத்து இருக்கும் இடத்தில்தான் பாதுகாப்பும் இருக்கிறது. கெட்ட கொலஸ்டிராலைத் தயாரிக்கும் அதே கல்லீரல்தான் நல்ல கொலஸ்டிராலையும் தயாரிக்கிறது. நல்ல கொலஸ்டிரால் எனப் புகழப்படும் ஹெச்டிஎல் என்ன செய்கிறது தெரியுமா? இதய குருதிக்குழாய்களில் படிந்திருக்கும் கொழுப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வந்து கல்லீரலுக்குக் கொடுக்கிறது. அதைக் கல்லீரலானது பித்தநீராக மாற்றி சிறுநீரிலும் மலத்திலும் வெளியேற்றுகிறது. நமக்கு உடல் பருமன் இருந்தாலும் உடனே மாரடைப்பு வராமல் பாதுகாப்பது ஹெச்டிஎல் மேற்கொள்ளும் இந்த மெக்கானிஸம்தான்.

எதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா? எல்டிஎல் அதன் எல்லையைத் தாண்டினால், நாம் சுதாரித்துக்கொள்ள வேண்டும். உடல் பருமனைக் குறைக்கவேண்டும். இல்லாவிட்டால், எல்டிஎல்லின் கை ஓங்கிவிடும். ஹெச்டிஎல் அப்போது தூங்கிவிடும். அப்படியான ஒரு கெட்ட நாளில் மாரடைப்பு எனும் எம தூதன் எட்டிப் பார்ப்பதைத் தடுக்க முடியாது. எல்லாம் உடல் பருமனின் உபயம்!

நல்ல கொலஸ்டிரால் (ஹெச்.டி.எல்) அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

தினமும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

உடல் பருமனைக் குறைக்க வேண்டும்.

டிரான்ஸ் ஃபட் (வுசயளெ கயவ) அதிகமுள்ள பேக்கரி பண்டங்களையும் சிப்ஸ், குக்கீஸ், பாக்கெட் உணவுகள், மீண்டும் மீண்டும் சூடுபடுத்திய எண்ணெயில் தயாரிக்கப்பட்ட பலகாரங்கள் போன்ற நொறுக்குத் தீனிகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும். மது அருந்தக் கூடாது.

புகைபிடிக்கக் கூடாது.

தேவைப்பட்டால், 'ஸ்டாடின்' மாத்திரைகளைச் சாப்பிடவேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணில் என்ன முட்டுக்கட்டை போட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக இடம்பெற்றே தீரும்

## அனுரகுமார திஸநாயக்க எம்.பி. நம்பிக்கை

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த விதமான முட்டுக்கட்டை போட்டாலும் சரி ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடந்தே தீரும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச வர்த்தக பிரமுகர்களை வெள்ளிக்கிழமை மாலை காரைதீவில் சந்தித்து கலந்துரையாடிய போது மேற்கண்டவாறு தனது உரையில் குறிப்பிட்டார். மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

எமது நாட்டு மக்கள் காலம் காலமாக தொடர்ந்தேச்சையாக நாட்டையும், மக்களையும் அழித்து வருபவர்களுக்கே வாக்குகளை வழங்கி வந்திருக்கின்றார்கள். இதனால்தான் நாடு அனைத்து விதங்களிலும் கெட்டு குட்டி சுவராகி இருக்கின்றது.

இனவாதிகளும், ஊழல்வாதிகளும், இந்நாட்டை ஆண்டதால் தான் நாட்டில் இனவாதம் மேலோங்கி பொருளாதாரம் சீரழிந்து அனைத்து விதத்திலும் நாடு பின்னடைந்து காணப்படுகிறது.இனவாதத்தை முதலீடாக பயன்படுத்தி ஆட்சி நடத்திய ராஜபக்ஸக்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மத்திய வங்கி கொள்ளையில் ஈடுபட்ட ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

வீடமைப்பு அமைச்சின் பணத்தை வீணடித்த சஜித் பிரேமதாஸவால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. ரணில் அரசாங்கத்திடம் இருந்து மதுபான விற்பனைசாலை அனுமதி பத்திரம் பெற்ற எம். பிகள் சஜித்துடன் உள்ளனர். இதை சஜித் மறுப்பாரா?

சஜித் தரப்பினர் பகலில் ரணி விக்கிரமசிங்கவுடன் ஊடல் செய்கின்றனர், இரவில் கூடல் செய்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க என்ன முடிச்சுகளை போட்டாலும் அடுத்த இரண்டரை மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதி தேர்தல் நடந்தேயாகும்.



இத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மகத்தான வெற்றியை பெற்று அதன் மூலமாக எமது நாட்டு மக்கள் விரும்புகின்ற மக்கள் ஆட்சி நிச்சயம் மலரும். எமது ஆட்சியில் இனவாதம் இருக்காது. பொருளாதார மாட்சி ஏற்படும். எமது மக்களுக்கு மீட்சி ஏற்படும். தென்னிலங்கை மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றித்து நிற்கின்றனர். அதே போல தேசிய மக்கள் சக்தி மூல்மாக மக்கள் ஆட்சி உருவாக்கப்படுவதில் கிழக்கு மக்களும் பங்காளிகளாக இணைய வேண்டும்.

மாற்றுத்துக்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம். இலங்கையர்களாக நாம் அனைவரும் வாழ்வோம். புதிய தேசத்தை கட்டியெழுப்புவோம். - என்றார். (05)

# நிந்தவூர் ஜனாஸா நலன்புரிக்கு பைசல் காசிம் எம்.பி. உதவிகள்





(எம்.ஏ.றமீஸ்)

நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிமிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு தொகை பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை அமைப்பின் தலைவர் எம். சபீக் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கதிரைகளின் ஒரு தொகுதியைக் கையளித்தார்.

நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்பு உருவாக்கத்தைத் தொடர்ந்து பல்வேறு உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் மேற்கொண்டு வருகின்றமை தொடர்பிலும் இவரது உதவிகள் மூலம் பல்வேறு பிரதேச மக்கள் நன்மையடைந்து வருகின்றமை குறித்தும் இதன்போது சிலாகித்து பேசப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிமின் நிதி உதவிகளின் மூலம் மையவாடி களஞ்சிய அறைகளின் புனர்நிர்மாணம், நலன்புரி அமைப்பிற்கான கூடாரங்கள், கதிரைகள், காரியாலய தளபாடங்கள், மடிகணிணி, பிரிண்டர், பல்லூடக சாதனங்கள், ஒலி அமைப்பு வசதிகள் போன்றன பெற்றுக் கொடுக்கப்பட்டதாகவும் இதற்கென நாடாளுமன்ற உறுப்பினருக்கு தமது நன்றியினைத் தெரிவிப்பதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாஸா வாகன மொன்றை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருவது பற்றியும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் தனதுரையின்போது -

நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்பின் பல்தரப்பட்ட சேவைகள் பற்றி எடுத்துக் கூறியதுடன், ஏனைய பிரதேசங்களிலிருந்தும் முன்மாதிரியாக செயற்பட்டு வரும் நிந்தவூர் ஜனாஸா நலன்புரி அமைப்பின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை வியந்து பாராட்டியதோடு, தன்னால் இயலுமான அனைத்து முன்னெடுப்புகளையும் உதவிகளையும் அமைப்பினதும் நமது பிராந்திய மக்களின் எதிர்கால நலன் கருதியும் தான் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (05)

# நாவிதன் வெளி விளையாட்டு கழக வளர்ச்சிக்கு ஹரீஸ் எம் . பியின் முயற்சியால் நிதி ஒதுக்கீடு



நாவிதன்வெளி பிராந்தியத்தில் ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதில் முதன்மையான கழகங்களாக இருந்து பிரதேச விளையாட்டு மேம்பாட்டுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வரும் விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து கழகத்தினை வளர்ச்சி அடையச் செய்ய திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுபபினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் விளையாட்டு கழகங்களின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு கடிதங்கள் வெள்ளிக்கிழமை நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் வைத்து கழக நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக எமது நாட்டில் நிலவிவரும் கடின பொருளாதார சூழ்நிலையின் காரணமாக விளையாட்டு கழகங்கள் எதிர்நோக்கிவரும் சிக்கல் நிலையை நிவர்த்திக்கும் விதத்தில் ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கிணாங்க இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி. கிருபைராஜா தலைமையில் நடைபெற்ற இந்த ஆவணங்களை கையளிக்கும் நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆவணங்களை கையளித்தார். இந்நிகழ்வில் மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி.ஏ. நஸார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் நாவிதன்வெளி பிரதேச இணைப்பாளர் எம். நௌபர், நாடாளுமன்ற உறுப்பினரின் விளையாட்டு கழகங்களுக்கான இணைப்பாளர் ஏ.எம் நளீம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)

# கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு வாகூரவட்டையில் ஜீவ சேவை







(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் பாதயாத்திரையில் பயணிக்கும் கானகப் பாதையின் முதல் தங்குமிடமாக விளங்கும் கிணற்றடி அல்லது வாகூரவட்டை எனுமிடத்தில் பாதயாத்திரீகர்களுக்கு பழரசம், பிஸ்கட் ,தேனீர் மற்றும் வெற்றிலை, பாக்கு போன்ற பண்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பிரபல சமூக செயற்பாட்டாளர் கே.ஜெயசிறில் மற்றும் சமூக ஆர்வலர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இந்த உதவி யாத்திரீகர்களுக்கு வழங்கப்பட்டது.

புலம்பெயர்ந்த ஜெர்மன் விஜயகலா சந்திரகுமார், சுவிஸ் விஜயகுமாரி மகேஸ்வரன், ஜெர்மன் காந்தன், கனடா லிங்கன், உதயன் ஆகியோரின் நிதி அனுசரணையில் இது வழங்கப்பட்டிருக்கின்றது . தொடர்ந்து குமுக்கன் நதி தீத்திலும் இந்த உதவி வழங்கப்பட்டது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# 25 ஆண்டுகளுக்குமேல் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவோர் ஓய்வுபெறுக

## ஐக்கிய நூற்றாண்டு முன்னணி கோரிக்கை







நாடாளுமன்றத்தில் 25 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்தவர்கள் நாட்டுக்காக எதனை செய்துள்ளார்கள். இவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்களா, அல்லது தங்களின் குடும்ப அபிவிருத்திக்காக அங்கம் வகிக்கிறார்களா? இவர்களால் இனி ஏதும் முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

ஆகவே, இவர்கள் கௌரவமான முறையில் ஓய்வுபெற்று இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஐக்கிய நூற்றாண்டு முன்னணியின் தலைவர் பிரசாத்தி விஸர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நூற்றாண்டு முன்னணி காரியாலத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும். ஒருசில அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தை அரச சேவையாக நினைத்துக்கொள்கிறார்கள். இறக்கும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு செயற்படுகிறார்கள். இவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்களா? அல்லது தமது குடும்ப அபிவிருத்திக்காக அங்கம் வகிக்கிறார்களா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 75 வயது. இவர் 42 ஆண்டுகள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில்தான் சிவில் யுத்தம் இடம்பெற்றது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. 42 வருடங்கள் ஒன்றும் செய்யவில்லை. இனியும் இவரால் எதனை சாதிக்க முடியும்? முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 78 வயது. இவர் 39 வருடங்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்ததன் பின்னர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் முறைமையை இவர் தோற்றுவித்தார். உலகில் வேறெந்த நாடுகளிலும் இவ்வாறான நிலை கிடையாது. நாட்டின் உயரிய பதவியான ஜனாதிபதி பதவியை வகித்த ஒருவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 72 வயது. இவர் 39 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். நல்லாட்சி அரசாங்கத்தில் இவர் செயற்பட்ட விதம் 2019 ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கு மூல காரணியாக அமைந்தது. ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு நாட்டுக்கு செய்யாத சேவையையா இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு செய்யப் போகிறார்?

நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளில் பெரும்பாலான உறுப்பினர்கள் 30 வருடங்களுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கிறார்கள். இவர்களால் இனி ஏதும் செய்ய முடியாது என்பது உறுதியாகியுள்ளது. ஆகவே இவர்கள் நாட்டுக்காகவேனும் கௌரவமான முறையில் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும். அரசியல் கட்சிகள் இவர்களுக்கு வேட்பு மனுக்கள் வழங்க கூடாது. இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். - என்றார். (05)

# பஸ்ஸில் வாள் வெட்டு சாரதி, பயணி காயம்

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த இருவர், பஸ்ஸின் சாரதி மற்றும் பயணி ஒருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வெள்ளிக்கிழமை பயணித்த பஸ்ஸில், கைதடி பகுதியில் வைத்து இரு இளைஞர்கள் ஏறியுள்ளனர்.

பின்னர், இந்த இளைஞர்கள் இருவரும் அரியாலை பகுதியில் வைத்து பஸ்ஸில் இருந்து இறங்கி, நடத்துனருடன் முரண்பட்டுள்ளனர்.

இதன்போது, சாரதியும், பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவரும், அவர்களை சமரசப்படுத்த முயன்றுள்ளனர்.

இதன்போது, இந்த இரு இளைஞர்களும், திடீரென தாம் மறைத்து வைத்திருந்த வாளினை எடுத்து, அங்கிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலில் சாரதி மற்றும் பயணி ஆகியோர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரரின் வீட்டினில் திருட்டு

## சந்தேகநபர் கைது

தலங்கமை கலல்கொட பிரதேசத்தில் உள்ள முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் சச்சித்ர சேனநாயக்கவின் வீட்டில் கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி 50 லட்சம் ஷரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான பணம் மற்றும் சொத்துக்களை திருடிய சந்தேக நபரொருவர் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார் என கொட்டாவை பொலிஸார் தெரிவித்தனர்.

தலங்கமை உத்துவன்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்டதாக கூறப்படும் மடிக்கணினி, 2 டெப், 5 கைக்கடிகாரங்கள், 4 கைவளையல்கள், 2 காதணிகள் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் ஆகிய பொருள்கள் சந்தேக நபரின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், திருட்டு சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படுவதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர், கொட்டாவை, தலங்கமை மற்றும் மஹரகம ஆகிய பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் கடைகளை உடுத்து திருடிய சம்பவங்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாவை பொலிஸார் முற்கொண்டு வருகின்றனர். (05)

# 14 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய தாயத்து கட்ட வந்த பூசாரி கைது

பதினான்கு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் பூசாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர். லுணுகலை ஹொப்டனைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். தனது மகளுக்கு அளவுக்கதிகமான கோபம் வருவதாகவும் வீட்டில் உள்ளவர்கள் சொல்வதை பிள்ளை கேட்பதில்லை எனவும் பல காரணங்களால் தெய்வ குற்றமாக இருக்கலாம் என எண்ணி பிள்ளைக்கு தாயத்து கட்டுவதற்காக பூசாரி ஒருவரை அணுகியுளள்னர்.

இதன்போது கடந்த மாதம் 3 ஆம் திகதி சிறுமியின் வீட்டுக்கு வந்த பூசாரி பிள்ளைக்கு தாயத்து கட்ட வேண்டும் என கூறி அனைவரையும் வெளியே செல்லுமாறு கூறியுள்ளார். அதன்பின்னர் இந்த பூசாரி தனிமையில் இருந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரியவந்துள்ளது. பின்னர் சுகவீனமுற்ற சிறுமியை பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்க முற்பட்ட போது சிறுமி கருத்தரித்திருப்பது தெரியவந்துள்ளது. அதன் பின்னர் 7ஆம் மாதம் 11 ஆம் திகதி லுணுகலை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய 30 வயதுடைய நமுனுகுலை கனவரல்ல பகுதியை சேர்ந்த பூசாரி லுணுகலை பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சிறுமி பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபரை பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஐஸ் போதைப்பொருளுடன் கிண்ணியாவில் பெண் கைது

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பைசல் நகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கூபா நகர் கிண்ணியா 03 ஐ சேர்ந்த 34 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே கைது செய்யப்பட்டார் இவரிடமிருந்து 11 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த பெண்ணை சோதனையிட்ட போது அவரிடம் இருந்து ஐஸ் போதைப்பொருளை மீட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். முன்னரும் போதைப்பொருளில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# மலேசிய துணைப் பிரதமரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

*மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்நாட்டு துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டிஅகமட் ஜாஹிட் பின் ஹமிடியைச் சந்தித்தார்.*

*இதன்போது இரு நாட்டு உறவை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.*

*இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் ஆகியோர் உடனிருந்தனர்.*

*(05)*

# கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்ட அமெ. தூதரகத்தினர்





முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பகாமம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் பார்வையிட்டதுடன், வெடிபொருள் அகற்றலில் இருக்கின்ற நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு முன்னதாக முல்லைத்தீவு அம்பகாமம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளை சென்று பார்வையிட்டு, அதன் நிலைமைகள் தொடர்பில் கிளிநொச்சியில் அமைந்துள்ள டாஸ் நிறுவனத்தின் அலுவலகத்தில் கலந்துரையாடினர். (05)

# நாவிதன் வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள்



நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் டி- 100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் நாவிதன்வெளி அமீரலி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் ஜனாதிபதியின் விசேட நிதியொதுக்கீடுகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள டி- 100 வேலைத்திட்டத்தினூடாக பிரதேச வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது இடங்கள் என பல்வேறு இடங்கள் அபிவிருத்தி செய்யத்தேவையான பணிகள் இதன்மூலம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி. நஸார் ஹாஜியின் தலைமையில் நடைபெற்ற நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மைதான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்ததுடன் பிரதேச வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது இடங்கள் என பல்வேறு இடங்கள் அபிவிருத்தி செய்யத்தேவையான நிதியொதுக்கீட்டு ஆவணங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஆர். அமீர், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாவா, இணைப்பாளர் சப்ராஸ் நிலாம், மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் நாவிதன்வெளி பிரதேச இணைப்பாளர் எம். நௌபர், நாடாளுமன்ற உறுப்பினரின் ஏனைய இணைப்பாளர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மத்திய குழுவினர், வட்டார அமைப்பாளர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இன வேறுபாடுகள் இல்லாது நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு நன்மை அளிக்கும் விதமாக அமைந்துள்ள இந்த டி- 100 திட்டம் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதுடன் பெருந்திரளான மக்கள் இந்த விழாவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

## காரைதீவில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார





(எஸ்.அஷ்ரப்கான்)

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் அம்பாறை மாவட்ட கரையோர வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை காரைதீவில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்பாட்டாளரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ. ஆதம்பாவா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்டத்தின் பெருமளவிலான தமிழ் பேசும் கரையோர வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் பல வர்த்தகர்கள் இங்கு பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் முன்னிலைப்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க உரையாற்றும்போது -

எங்களது நாடானது பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்ட வீழ்ச்சி அடைந்த நாடாக இருக்கின்றது. வாங்கிய கடனை செலுத்த முடியாத ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். தொழில் வல்லுனர்களுக்கு இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும் ஆட்சியாளர்கள் ஏன் இனவாதத்தை கொண்டு வருகிறார்கள் ? எங்கள் எல்லோருக்கும் தெரியும் அவர்களுக்கு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதவிடத்து, பிள்ளைகளுக்கு தொழில் ஒன்றை வழங்க முடியாதவிடத்து, மீனவ சமூகத்தினுடைய பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் அவர்கள் இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவார்கள். இந்த இனவாதத்தின் ஊடாக சிங்கள மக்களை மூளைச்சலவை செய்து சிங்கள மக்களுக்காக ஒரு அரசாங்கத்தை உருவாக்குவோம் என்று சொல்வார்கள்.

ஆகையினால் இந்த நாட்டை சிறப்பாக கட்டி எழுப்புவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும் தேசிய ஒற்றுமையை யாருக்கு உருவாக்கலாம். சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒற்றுமை தேவை இல்லையா ?

தேசிய ஒற்றுமை தேவை இல்லையா ? அதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். அது தேவை இல்லை என்றால் வேறு கட்சிகளை நீங்கள் தேர்ந்தெடுங்கள். வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறைய பேர் இங்கே இருக்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் மக்களை சந்திக்கிறீர்கள். கலந்துரையாடு கின்றீர்கள். நீங்கள் சொல்வதை மக்கள் கேட்பார்கள். இன்னும் இரண்டரை மாதங்கள் தான் இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்து கதைப்போம். தெற்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் மாற்றம் உருவாக வேண்டும். - என்றார்.(05)

# லோகி தோட்டத் தொழிலாளர்கள் நுவரெயா வீதியில் ஆர்ப்பாட்டம்

(எஸ் சதீஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1700 ரூபா சம்பளம் இழுப்பறியான நிலை காணப்படுவதால் பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும் என கோரி நேற்று 13 ஆம் திகதி அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் லோகி தோட்ட தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக லோகி தோட்டத் தொழிலாளர்கள் 100 இற்கும் மேற்பட்டவர்கள் பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது பதாதைகளை ஏந்தியும் கோஷங்கள் எழுப்பி தமது எதிர்ப்பினை தொழிலாளர்கள் முன்னெடுத்தனர்.

உடனடியாக சம்பளம் வழங்க வேண்டும், வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது, பொருளின் விலை அதிகரிப்பு என தெரிவித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சம்பள வழங்காத பெருந்தோட்ட கம்பனிகள் உடனடியாக தோட்டங்களை அரசாங்கத்திடம் கையளித்து விட்டு செல்லுமாறு கோரிக்கை விடுத்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள் கோஷங்கள் எழுப்பி பதாகைகள் ஏந்தி சுமார் மூன்று மணி நேரம் தங்களின் எதிர்ப்பு நடவடிக்கையை பிரதான வீதியில் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குத் தெரிவு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் இம்முறை நடைபெற்ற வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 வெற்றி இடங்களை தனதாக்கி மாகாணப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வடமும் கல்வியிலும், விளையாட்டு, கலை, இலக்கிய போட்டிகளிலும் பிரகாசிக்கும் இந்த பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் மாகாண மற்றும் தேசிய அளவில் பிரகாசித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ் ,விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஆபாக் ஆகியோர்களின் பயிற்சியின் பயனாக இந்த அடைவுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு சிறப்பான முறையில் தயார் படுத்திய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இணைப்பாடவிதான த்திற்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம். ஹாத்திம் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தெரிவித்துள்ளார்

.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2024இல் வெளியிடப்பெற்றது